1983 ஜனவரி 29]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சர்டிபிகேட்டுகள், பல பொறுப்பு பத்திரங்கள் போன்றவைகளையெல்லாம் பெற்றுக்கொண்டுதான் கடனை வழங்கியிருக்கிறோம். கடனை வாங்குகிற வரையில் எதையும் எழுதிக் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். வாங்கியதற்குப் பிறகு—''கடனை வாங்கி உடம்பை தேற்று, கடனை கொடுத்தவன் வந்து கேட்டால் முதுகை காட்டு'' என்று தமிழ்நாட்டிலே ஒரு பழமொழி உண்டு-அதுபோல் கேட்கும் போது நழுவப் பார்க்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைத்போல ஒன்றிரண்டு சம்பவங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவைகள் மீதும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பைனான்ஸ் கார்ப்பொரேஷன் மூலமாக கடன் வாங்கியவர்களில், ஏற்கெனவே பல தியேட்டர்கள் வைத்துக் கொண்டிருப்பவர்கள் இடம் பெற்றிருக்கிறார்களா? இனிமேல் கடன் வழங்குகிறபோது இப்படி பல தியேட்டர்களை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு கடன் வழங்குவதை மறுக்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, தியேட்டர்களை நடத்திக்கொண்டிருப்பவர்களுக்கு கடன் வழங்க வேண்டும் என்று விதியிலே இல்லை. அப்படி ஒருவேளை அவர்கள் கடன் வாங்கி இருந்தால் முன்னாலேயே இருக்கின்ற தியேட்டர்கள் அவர்கள் பெயரிலே இருக்காது.

பழவகைகள் அதிக மகசூல் தர வேளாண்மைத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

*வினா எண் 47—திரு. இல. பலராமன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ''மா'' ''கொய்யா'' போன்ற பயன்தரும் பழவகைகள் அதிக மகசூல் தர வேளாண்மைத்துறை மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டன?

(இ) இவைகள் எந்தெந்த மவட்டங்களுக்கு ஏற்றவை?

[1983 ஜனவரி 29

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம். பழ வகைகள் அதிக மகசூல் தர தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மூலம் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) மற்றும் (இ): கீழ்க்கண்ட புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப் பட்டு வெளியிடப்பட்டுள்ளன:

மா ..	பெரியகுளம் 1 ..	தென்மாவட்டங் களுக்கு ஏற்ற இரகம்.
சப்போட்டா ..	கோ 1 மற்றும் 2 ..	தமிழ்நாட்டில் உள்ள எல்லா சமவெளிபிரதேசங் களுக்கும் ஏற்ற இரகங்கள் ஆகும்.
	பெரியகுளம் 1 ..	தென்மாவட்டங் களுக்கு ஏற்ற இரகம்.
பப்பாளி ..	கோ 1 மற்றும் 2 ..	தமிழ்நாட்டில் உள்ள எல்லா சமவெளி பிரதேசங்களுக்கும் ஏற்ற இரகங்கள் ஆகும்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, இந்தப் புதிய கன்றுகளை அரசு என்ன விலைக்கு விநியோகிக்கின்றது? அவ்வாறு விநியோகிக்கப்பட்ட அளவு எவ்வளவு? வறட்சியான பகுதிகளில் விவசாய மேம்பாட்டுக்கு உதவுகின்ற வகையிலே அதிகமாக நடுவதற்கான ஆக்கபூர்வமான பணிகளை அரசு மேற்கொண்டிருக் கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இவற்றைப் பற்றிய குறிப்புகள் இல்லை. ஆனால் புதிய ரகங்கள் மூலம் பழ விருத்தி அதிகமாகி இருக்கின்றது என்ற குறிப்பு இருக்கின்றது.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, இந்தப் பழ உற்பத்தியினைப் பொறுத்தவரையிலே புதிய ரகங்களைக் கண்டு பிடித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்தப் பழ உற்பத்தி ரகங்களை நடுவதற்காக ஆங்காங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இலவசமாக கொடுத்தால் மரங்களும் வருளும், பழங்களும் உற்பத்தியாகும். ஆகவே பெருமளவில் இலவசமாக சப்ளைசெய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1983 ஜனவரி 29]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இலவசமாகக் கிடைக்கும் என்றால் அதிக அக்கறை வராது. விலைக்குக் கிடைத்தால்தான் அக்கறை வரும்.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, இந்த மா, கொய்யா, பலா போன்ற பழ வகைகளைத் தருகின்ற கன்றுகளை எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடிய அளவிலே விநியோகிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா? இதிலே விசேஷமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மங்குஸ்தான் என்பது ஒரு விசேஷமான பழம். அந்தக் கன்றுகளை விஸ்தரிப்பதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, எல்லா பழ வகைகளும் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் வராது. எனவே, அந்தந்தப் பகுதிக்கு ஏற்ற வகையிலேதான் விநியோகம் செய்யமுடியும்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, வடஆர்க்காடு, தர்மபுரி, சேலம் போன்ற இடங்களில் ஏற்றுமதிக்குத் தகுதி வாய்ந்த மா வகைகள் அதிகமாக இருப்பதால் அங்கே அவற்றை அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதால் புதிய ரகங்களை அங்கே அதிகமாக விநியோகிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது? மேலும், அந்தக் கன்றுகளை மலிவான விலையில் தருவதற்கு அரசு முயற்சி எடுத்திருக்கின்றதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, அந்த வகையில் தோட்டக்கலைத் துறை முயற்சி மேற்கொண்டிருப்பதாக குறிப்பு இருக்கின்றது.

பெருந்துறை வட்டத்தில் கம்பளிப்புழு நிலக்கடலைப் பயிரை நாசம் செய்வதைத் தடுக்கும் திட்டம்.

*வினா எண் 48—திரு தி. கா நல்லப்பன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெருந்துறை வட்டத்தில் வருடா வருடம் ஆவணி, புரட்டாசி மாதங்களில் வேர்க்கடலை செடியில் கம்பளிப்புழு விழுந்து பயிர்களை நாசம் செய்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்த ஆண்டு அதைத் தடுக்க அரசு ஆரம்பத்திலேயே நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) சிவப்பு கம்பளிப்புழு நிலக்கடலைப் பயிரை தாக்குவதைத் தடுக்க, வருமுன் காப்பாக ஒட்டுமொத்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS